1968 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நேடியாகப் பார்வையிடப்பட்டிருக்கிறது. செலவு மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாகத்தான் இதற்கு இவ்வளவு தாமதமாகிவிட்டது. அதற்கு இன்னும் அங்கீகாரம் பெறவில்லை. அமைச்சரவர்கள் இதைப் பார்த்திருக்கிறார்கள். சர்க்கார் காரியங்களுக்குச் செல்லும் பொழுது சர்க்கார் செலவிலேயே சென்றிருக்கிறார்கள்.

துரித பஸ் கண்டக்டர்கள்

* 163 வினா.—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு போக்குவரத்து துரித வண்டிகளில் கண்டக்டராகப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் எஸ். எஸ். எல். சி. வரையில் படித்திருக்க வேண்டும் அல்லது வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்கிற திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அமலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, இது அரசின் பரிசீலனையிலாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கண்டக்டர்களுக்காக இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தகுதிகளை மாற்றுவதற்கான பரிசீலனை அரசாங்கத்தின் செயற்குறிப்பில் இல்லை.

மாண்புமிகு திரு. பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து வினா எண் 164, 165 இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

கூவம் ஆறு

* 164 வினா—**என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

சென்னை நகரில் கூவம் ஆற்றில் படகுப் போக்குவரத்தினை நடத்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். சென்னை மாநகரில் கூவம் ஆற்றினைச் சுத்தமாகவும், படகுப்போக்கு வரத்திற்கு ஏற்றதாகவும் அமைக்க, ரூபாய் 118·50 லட்சம் மதிப்பிட்டுச் செலவாகும் திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது, இருநிலைகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் கீழ், ஆற்றில் மின்விசைப் படகுகளைப் பயன்படுத்தி மக்கள் போக்குவரத்துக்கும் பண்டப்போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்வதோடு, மேலும் இந்நீர் வழியில் படகு வீடுகளும் , உல்லாசப் படகுகளும் செல்வதற்கு வழிவகை செய்யலாம். இவை பற்றிய குறிப்பான செயற் குறிப்புகள் இத்திட்டம் நிறைவேறிவரும் தருணத்தில் வகுக்கப்படும்.

* 165 Q.—**Thiru K. VINAYAKAM and Thiru N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to eradicate the dirty smell emanating from the Cooum river ; and

(*b*) whether it is proposed to flush the Cooum water into the sea ?